செம்பியநல்லூர் ஊராட்சி மன்ற செயல் அலுவலர்/ தலைவர் அவர்களின்
நடவடிக்கைகள்
முன்னிலை திருமதி. .V.K.சுதா

ந.க.எண்: 01/2024 நாள் : 01/08/2024

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம்- திருப்பூர் மாவட்டம் - அவினாசி வட்டம் - அவினாசி ஊராட்சி ஒன்றியம்- செம்பியநல்லூர் ஊராட்சி மற்றும் கிராமம்- க.ச.எண் : 133/8B, 9B, 9C, 155, 156/1, 2, 157/1, 2, 3, 4, 158/1, 2, 3, 4B, 159/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 160/1, 2, 3, 4 & 5 -ல் 37.825 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்ற மனைப்பிரிவிற்கு வரைப்பட அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்குதல்- தொடர்பாக

பார்வை :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண்: 9062/2019/தி.மா நாள்: 14.05.2024.
2. அரசாணை நிலை எண்: 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ 4(3), நாள்: 04.05.2017
3. செம்பியநல்லூர் ஊராட்சி பொது நிதி கணக்கில் பல்வகை இரசீது எண்: 370749, 370748, நாள்: 15-07-2024
4. தனி அலுவலர்/ தலைவர் செம்பியநல்லூர் ஊராட்சி கடிதம் ந.க.எண்: 01/2024

ஊத்தரவு,

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், செம்பியநல்லூர் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண் : 133/8B, 9B, 9C, 155, 156/1, 2, 157/1, 2, 3, 4, 158/1, 2, 3, 4B, 159/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 160/1, 2, 3, 4 & 5 -ல் 37.825 ஏக்கர் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.இ.எண்: 35/2024

மனைப்பிரிவு மொத்த பரப்பளவு : 37.825 ஏக்கர் (அ) 153072.32 ச.மீ

மேற்படி நிகர மனையின் வளர்ச்சிக்கட்டணம் : 2336000.0/- மற்றும் ஆய்வுக்கட்டணம் ரூ: 1000/- சேர்த்து மொத்தம் ரூ: 2337000.0/- (ரூபாய் இருபத்தி மூன்று லட்சத்தி முப்பத்து ஏழாயிரம் மட்டும்). பார்வை 3-ல் காணும் உத்தரவின்படி செம்பியநல்லூர் ஊராட்சி பொது நிதி கணக்கில் செலுத்தியுள்ளார்.

மேலும் பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள உத்தரவின்படி மனையிடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை அரசு வழிகாட்டி மதிப்பின்படி நிலப்பயன் மாற்றத்திற்காக ரூ: 1026000/-(ரூபாய் பத்து லட்சத்து இருபத்தி ஆறாயிரம் மட்டும்), அரசு கருவூல கணக்கில செலுத்தியுள்ளார். சலான் எண்: 20240713001345, நாள் : 13.07.2024

எனவே கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரைப்பட அங்கீராமம் மற்றும் மனைப்பிரிவு அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகளின்படி வழங்கபட்ட ம.வ/ந.ஊ.இ.எண்: 35/2024 -ல் குறிப்பிட்டுள்ளவாறு எல்லை கற்கல் வரையறுக்கப்பட வேண்டும்.

2. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு ந.க.எண்: 9062/2019/தி.மா நாள்:14.05.2024 நிபந்தனைகளின்படியும் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக ரூ:20/-ஒப்பந்த பத்திரத்தில் (ஸ்டாம்ப் பேப்பரில்) எழுதிக்கொடுக்க வேண்டும்.

இணைப்பு: திருப்பூர் மாவட்டம் துணை இயக்குநர், அவர்களின் நடவடிக்கைகளின் அசல் கடிதம் மற்றும் மனைப்பிரிவு வரைபடம் ம.வ/ந.ஊ.இ.எண்: 35/2024 மனைப்பிரிவு நிபந்தனைகள் கோப்பு எண்: 9062/2019, நாள்:14.05.2024.

செயல் அலுவலர்/தலைவர்,
செம்பியநல்லூர் ஊராட்சி
President
Sembianallur Panchayat
Avanashi Union

பெறுநர்:

திரு.R.அருணாச்சலம் மற்றும்,
திருமதி.A.விஜயசாமுண்டீஸ்வரி,
கதவு.எண்: 22, காந்தி நகர்,
3-வது வீதி,
திருப்பூர் மாவட்டம் 641-603.

நகல்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் மாவட்டம்
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அவினாசி